**செய்தி வெளியீடு எண்: 03/2022** **நாள்: 26.01.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் 73-வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது**

கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் 73வது குடியரசு தின விழா இன்று (26.01.2022) நடைபெற்றது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

குடியரசு தின விழா மற்றும் (Azadi ka Amrut Mahostav) கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக பல விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. மேலும், 54 வெற்றியாளர்கள் இந்நிகழ்வின் போது அறிவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தனி மனித இடைவெளியை கடைபிடித்து பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**